


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில்,தேசிய குடற்புழு நீக்க தினத்தை முன்னிட்டு அனைத்து அரசுத்துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைப்புக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக சிறுகூட்டரங்கில் இன்று (04.08.2016) நடைபெற்றது

செ.வெ.எண்: 493/2016 நாள்: 04.08.2016

## பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை,

## தேசிய குடற்புழு நீக்க தினம்

வளரும் குழந்தைகளுக்கு குடற்புழுக்கள் இருந்தால் உடல் வளர்ச்சி குறைபாடு, இரத்த சோகை மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு ஏற்படுகிறது. மேற்கண்ட குறைபாடுகளை களைவதற்கு வருடத்திற்கு இருமுறை குடற்புழு நீக்க மாத்திரை கொடுப்பதுடன் கைகழுவுதல், கழிப்பறைகளை பயன்படுத்துதல் மற்றும் தன்சுத்தம் ஆகியவற்றை குழந்தைகளுக்கு கற்றுக் கொடுப்பதன் மூலம் அவர்களுக்கு ஏற்படும் இரத்த சோகை மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுகளை நீக்கலாம்.

இந்த வருடம் 10.08.2016-ம் தேதி நமது மாநிலத்தில் 1 முதல் 19 வயது வரையிலுள்ள அனைத்து குழந்தைகள் மற்றும் வளர் இளம் பருவத்தினருக்கு குடற்புழு நீக்கம் செய்யும் பொருட்டு அல்பண்டோசால் மருந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை முழுமையாக நல்லமுறையில் செயல்படுத்தும் பொருட்டு சுகாதாராத் துறை, கல்வித்துறை மற்றும் ஊட்டச்சத்து துறை இணைந்து செயல்பட அறிவுறுத்தப்பட்டுள்ளனர். 1 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் மற்றும் பள்ளி செல்லாத குழந்தைகளுக்கு ஊட்டச் சத்து மையத்திலும், அனைத்து அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு பள்ளிகளிலும் வைத்து மதிய உணவுக்குப்பின் ஒரு மாத்திரை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த மாத்திரையை கடித்து சுவைத்து சாப்பிட வேண்டும்.

நமது மாவட்டத்தில் மாத்திரை வழங்கப்படும் தினமான 10.08.2016 அன்று சுமார் 4.9 லட்சம் குழந்தைகள் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு தேவையான 4.9 லட்சம் மாத்திரைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை நல்ல முறையில் செயல்படுத்தும் விதமாக இன்று 04.08.2016 மாவட்ட ஆட்சியர் தலைமையில் அனைத்து துறைகளையும் சார்ந்த அலுவலர்களின் ஒருங்கிணைப்பு குழு கூட்டமானது நடைபெற்றது.

இம்மாத்திரைகள் உட்கொள்வதால் எந்த விதமான பக்க விளைவுகளும் ஏற்படுவதில்லை. மாத்திரை வழங்கப்படும் தினமான 10.08.2016 அன்று உடல் நலக்குறைவோ அல்லது மற்ற காரணங்களால் மாத்திரை உட்கொள்ளாத குழந்தைகளுக்கு 17.08.2016 அன்றும் மாத்திரை வழங்கப்படும். எனவே பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் மாத்திரை உட்கொண்டதனை உறுதிபடுத்தி அவர்களது நல்வாழ்விற்கு ஒத்துழைப்பு நல்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ஆர். சவான் கேட்டுக் கொள்கிறார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.